# Press Meet on Open and Distance mode Bachelor of Farm Technology (B.F. Tech.) offered by Tamil Nadu Agricultural University conducted at Krishi Vigyan Kendra, Tindivanam

The Directorate of Open and Distance Learning of the Tamil Nadu Agricultural University, Coimbatore introduced a Bachelor Degree Programme **B.F. Tech**. exclusively for farmers during 2010 as the pioneer attempt of the University in the global agriculture. The degree programmeis structured in such a way, that the farmers would have the privilege of being degree holders with esteem, confidence and recognition in the modern society.In order to provide media information and sensitize the farming community in the North Eastern Zone of Tamil Nadu a Meet the Press programme was organized at the KrishiVigyan Kendra, Tindivanam in Villupuram District. Dr. P. Santhy, Director, Open and Distance Learning, Tamil Nadu Agricultural University, Dr. S. R. Santhi, Professor in the Directorate attended the event. A total of 12 reporters from the printing and broadcasting media were the invitees. The gathering was welcomed by Dr. K. Senthamizh, Assistant Professor (Nematology) and the Coordinator of the Course at the KrishiVigyan Kendra, Tindivanam.

Dr. P. Santhy, Director, informed the gathering that the purpose of the Press Meet is to highlight the degree programme offered by the Tamil Nadu Agricultural University. This Undergraduate Farm Degree Programme is presently offered in six centres of the University.It provides scope for the farmers to become successful entrepreneurs and self-propelled consultants with apt scientific background.The student enrollment numbers to 229 in 2010-11, 282 in 2011-12and to 104 in 2013-14 in 6 centres of TNAU. She informed the gathering that at present four batches of students are pursuing the course in different constituent units of the Tamil Nadu Agricultural University. The infrastructure facilities available with the University in 10 Colleges, 36 Agricultural Research Stations and 14 KrishiVigyanKendras are utilized in the programme. In order to motivate the farming community, providing opportunities to become entrepreneurs, the course fee of Rs.7,500/- has been reduced to Rs.4,000/- Semester.The Director elaborated about the salient features of the Degree programme and said that the programme is open for all the citizens. The eligibility criteria for admission is 10$^{th}$ appeared and must have attained age of 27 years. The applications are made available at the Directorate of Open and Distance Learning, TNAU, Coimbatore and other centres of Madurai, Tirunelveli, Tindivanam, Aduthurai and Sandhiyur. This course is designed for 6 Semester with 4 courses/semester.Farmers are provided with technologies from ploughing to

harvesting, apart from post harvest to value addition technologies. Demonstration and hands on Trainings related to agricultural technologies would be conducted in the Personal Contact Programme (PCP) organised for 10 days / semester.The medium of instruction is in Tamil, adhering simplicity. The next academic programme will commence in October 2013. The syllabus had been structured considering the needs of the farming community. The various subjects in the syllabus are as follows:

- Crop Production **(8 Subjects)**
    - Agronomy
    - Soil Science
    - Breeding
    - Seed Technology
    - Physiology
- Crop Protection **(3 Subjects)**
    - Entomology & Nematology
    - Pathology & Sericulture
    - Environmental Sciences & Microbiology
- Horticulture **(4 Subjects)**
    - Pomology, Olericulture, Floriculture, Spices and Plantation Crops
    - Medicinal Crops and Cold storage – techniques and availability
- Engineering **(2 Subjects)**
    - Solar Energy, Biofuels, Wind Energy, Farm Machineries
- Home Science **(1 Subject)**
    - Food Processing, Value added products and Adulteration
- Water Management and Irrigation systems **(1 Subject)**
- Economics of agricultural produces & Marketing the produces**(1 Subject)**
- Forestry**(1 Subject)**
- Animal Husbandry and Dairy Management **(1 Subject)**
- Entrepreneurship Development**(1 Subject)**
- Information and Communication Technology **(1 Subject)**

The Director, DoDL answered the queries of the reporters in the Press Meet. She informed that many professionals, public servants retired from government service, practicing farmers and farmwomen, house makers etc., and people young and old have chosen to attend this course. She mentioned that the course had positive impact on the students who are from different walks of life. This attempt of the University will definitely add strength to the livelihood of the individuals and community as whole.

Dr. N. Sathiah, Professor and Head, KrishiVigyan Kendra gave and overview of the KrishiVigyan Kendra, its goal and purpose. He mentioned that, as the KrishiVigyan Kendra in Tindivanam has good infrastructure, features and accessibility, the course is being offered here since 2010continuously. Currently 92 students in three batches of students are undergoing the degree programme. The personal contact classes are offered during weekends only to suit the convenience of the farmers and others who have enrolled for the course. The course has infused confidence among the participants and in reality the practices in the farm by the Contacties are now on scientific principles and are beginning to turn out as rural technocrats. The course teachers Dr. M. Renuga Assistant Professor (Horticulture), Dr. K. Natarajan, Assistant Professor (Seed Science & Technology) and Dr. K. Kavitha, Assistant Professor (Plant Pathology) were present in the Meet the Press event. Dr. S. R. Santhi, Professor (Agronomy), Directorate of Open and Distance Learning formally proposed the vote of thanks and observed that a large gathering of the media personnel is a welcome sign and information will reach the public in the shortest possible time.

Contact information for the public interested further on this subject:

For further details, please contact

The Director i/c
Open and Distance Learning
Tamil Nadu Agricultural University
Coimbatore – 641003
Phone:0422 6611229, 9442111058, 9442111048
Fax: 0422 6611429
e-mail: odl@tnau.ac.in
website: www.tnau.ac.in

# Photos - Press Meet on 24.09.2013


















KRISHI VIGYAN KENDRA,TINDIVANAM


KRISHI VIGYAN KENDRA,TINDIVANAM
PRESS MEET


KRISHI VIGYAN KENDRA,TINDIVANAM
Tamil Nadu Agricultural University
PRESS MEET


KRISHI VIGYAN KENDRA,TINDIVANAM
PRESS MEET




KRISHI VIGYAN KENDRA,TINDIVANAM





# Paper messages about ODL Press meet

CHENNAI
புதன், செப்டம்பர் 25, 2013
தி இந்து

## பண்ணைத் தொழில்நுட்ப பட்டப்படிப்புக் கட்டணம் குறைகிறது

### வேளாண் பல்கலைக்கழகம் அறிவிப்பு

விழுப்புரம்

விவசாயிகளுக்கான இளநிலை பண்ணைத் தொழில்நுட்ப பட்டப்படிப்பின் (பி.எப் டெக்) கட்டணம் குறைக்கப்பட்டுள்ளதாக தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் திறந்தவெளி மற்றும் தொலைதூரக் கல்வி இயக்ககத்தின் இயக்குநர் சாந்தி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது:

உலக அளவில் முதன்முறையாக விவசாயிகளுக்காக தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் இளநிலை பண்ணைத் தொழில் நுட்ப பட்டப்படிப்பை வழங்கி வருகிறது. இப்படிப்பில் 10-ஆம் வகுப்பு படித்த 27 வயது நிரம்பிய அனைவரும் சேரலாம். பயிர் உற்பத்தி, பயிர்பாதுகாப்பு, தோட்டக்கலை, வேளாண் பொறியியல், மனையியல், கால்நடை மேலாண்மை, தகவல் தொழில்நுட்பம் உள்ளிட்டவை இப்படிப்பில் அடங்கும். தமிழ்நாடெங்கும் 36 வேளாண் ஆராய்ச்சி நிலையங்கள், 14 வேளாண் விரிவாக்க மையங்களை மையப்படுத்தி, திருச்சி, மதுரை, கோவை, திண்டிவனம், ஆடுதுறை, சந்தியூர் ஆகிய 6 இடங்களில் இப்பாடத்திட்டம் வழங்கப்படுகிறது. இப்படிப்புக்கான பயிற்சிக் கட்டணம் 7500 ரூபாயிலிருந்து 4000 ரூபாயாகக் குறைக்கப்பட்டுள்ளது" என்றார்.

மேலும் விவரங்களுக்கு: இயக்குநர், திறந்தவெளி மற்றும் தொலைதூரக் கல்வி இயக்கம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்-641003 என்ற முகவரியில் தொடர்பு கொள்ளலாம்.




தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் திறந்தவெளி மற்றும் தொலைதூரக்கல்வி இயக்கத்தின் இயக்குனர் சாந்தி, திண்டிவனம் வேளாண்மை அறிவியல் நிலையத்தின் இயக்குனர் சாத்தையா, பேராசிரியர் சாந்தி ஆகியோர் உடன் உள்ளனர்.

# விவசாய பட்டப்படிப்பில் கட்டணம் குறைப்பு

## பல்கலைக்கழக இயக்குநர் தகவல்

**திண்டிவனம், செப். 25:** திண்டிவனம் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக திறந்தவெளி மற்றும் தொலைதூரக்கல்வி இயக்குநர் டாக்டர் சாந்தி நிருபர்களுக்கு அளித்த பேட்டி: தொலைதூரக்கல்வி முறையில் உழவர்களுக்கான இளநிலை பண்ணை தொழில்நுட்ப பட்டபடிப்பு (பி.எப்.டெக்) விவசாயிகள் நலன் கருதி கட்டணம் குறைக்கப்பட்டுள்ளது. 2010ல் துவக்கப்பட்ட இக்கல்வி முறை உலக அளவிலேயே முதல் முறையாக விவசாயிகளுக்கென்றே பாடத்திட்டத்தை தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் உருவாகியுள்ளது. 3 ஆண்டுகளுக்கு ஆறு பருவங்களில் பாடங்கள் நடத்தப்படுகிறது.

மாதத்தில் ஏதேனும் சனி, ஞாயிறு இரண்டு நாட்கள் மட்டுமே வகுப்புகள் எடுக்கப்படுவதும், 5 மாதம் முடிந்து 6வது மாதத்தில் செமஸ்டர் தேர்வு நடத்தப்படுகிறது.

27 வயது நிரம்பிய யாரேனும் சேர்ந்து பயன்பெறலாம், தமிழகமெங்கும் 36 வேளாண் ஆராய்ச்சி நிலையங்கள், 14 வேளாண் விரிவாக்க மையங்களை மையப்படுத்தி திருச்சி, மதுரை, கோவை, ஆடுதுறை, திண்டிவனம், சந்தியூர் என 6 இடங்களில் வகுப்புகள் நடக்கிறது.

பயிற்சி கட்டணம் ரூ. 7500ல் இருந்து ரூ. 4000 ஆக குறைக்கப்பட்டுள்ளது. மக்களிடையே நல்ல வரவேற்பு பெற்ற பி.எப். டெக்கில் தற்போது விவசாயிகள், ஓய்வு பெற்ற காவல் துறை அதிகாரிகள், டாக்டர், ஆசிரியர் மட்டுமின்றி ஏனைய அரசுத்துறை அதிகாரிகள், ஊழியர் இவ்வகுப்புகளில் சேர்ந்துள்ளனர். சுற்றுசூழல் பாதிப்பின்றி மண்ணின் தன்மை கெடாமல் சிறிய இடத்தை கொண்டு அதிக மகசூலை விஞ்ஞான முறையில் செயல்படுத்துவதே இக்கல்வியின் நோக்கம். அரசும் விளைச்சலை இரட்டிப்பு செய்யவும், மூன்று மடங்கு வருமானத்தை பெற முயற்சி செய்கிறது என்றார். அப்போது இயக்குநர் டாக்டர் சாத்தையா, பேராசிரியர் சாந்தி முனுசாமி, தோட்டகலைத்துறை பேராசிரியர் ரேணுகா, நோய் தடுப்பு ஆராய்ச்சி அலுவலர் செந்தமிழ் ஆகியோர் உடன் இருந்தனர்.

# பண்ணை படிப்பு விளக்க கூட்டம்

திண்டிவனம், செப்,25-

திண்டிவனம் எறையானூர் வேளாண்மை அறிவியல் நிலையத்தில். தொலை தூர கல்வி முறையில் உழவர்களுக்கான இளநிலை பண்ணைத் தொழில் நுட்ப பட்டப் படிப்பு குறித்த விளக்க கூட்டம் நடந்தது.

தமிழ்நாடு வேளாண்மை பல்கலை கழக திறந்த நிலை கல்வி இயக்குனர் டாக்டர் சாந்தி தலைமை தாங்கி பேசினார். உடன் பேராசிரியர்கள் சாத்தையா, சாந்தி, நடராஜன், செந்தமிழ், கவிதா ஆகியோர் இருந்தனர். இயக்குனர் டாக்டர் சாந்தி அளித்த பேட்டி:

இளநிலை பண்ணைத் தொழில் நுட்ப பட்டப்படிப்பு 2010ம் ஆண்டு முதல் திறந்த வெளி மற்றும் தொலை தூரக் கல்வி இயக்கத்தின் மூலம் வழங்கப்படுகிறது. உலகிலேயே முதல் முறையாக விவசாயிகளுக்காக வழங்கப்படும் முன்னோடி திட்டமாகும்.

மூன்று ஆண்டு படிப்பிற்கு வயது வரம்பு குறைந்தது 27 ஆகும். 10ம் வகுப்பு படித்த அனைவரும் சேரலாம். செமஸ்டர் முறையில் மூன்று ஆண்டுகளில் ஆறு பருவங்கள் பாடம் நடத்தப்படுகின்றன. மாதத்தில் இரண்டு நாட்கள் [சனி, ஞாயிறு] மட்டுமே வகுப்புகள் நடக்கும்.

தமிழகத்தில் கோவை வேளாண்மை பல்கலை கழகம்,திருச்சி, மதுரை, ஆடுதுறை, சேலம் மாவட்டம் சந்தியூர், திண்டிவனம் ஆகியவற்றின் வேளாண் அறிவியல் நிலையங்களில் இந்த வகுப்புகள் நடத்தப்படுகின்றன. 2010ம் ஆண்டு 300 பேர் சேர்ந்தனர். தற்போது 230 பேர் படித்து வருகின்றனர். 2011-12ம் ஆண்டில் 200 பேர் சேர்ந்தனர். 2012-13ம் ஆண்டிற்கான சேர்க்கை நடந்து வருகிறது.

ஒரு செமஸ்டருக்கு பயிற்சி கட்டணம் 7500 ரூபாய் என்றிருந்தது. விவசாயிகள் அனைவரும் பயன் பெறும் வகையில் தற்போது 4000 ரூபாயாக குறைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு டாக்டர் சாந்தி கூறினார்.



திண்டிவனம் வேளாண் அறிவியல் நிலையத்தில் தொலை தூர கல்வி முறையில் உழவர்களுக்கான தொழில் நுட்ப படிப்பு குறித்த விளக்க கூட்டத்தில் இயக்குனர் டாக்டர் சாந்தி பேசினார். அருகில் பேராசிரியர் சாத்தையா



## தொலை தூரக்கல்வி முறையில்

# உழவர்கள் இளநிலை பண்ணை தொழில்நுட்ப பட்டப்படிப்பு படிக்கலாம்

## இயக்குனர் தகவல்

திண்டிவனம், செப்.26-

தொலை தூரக்கல்வி முறையில் உழவர்கள் இளநிலை பண்ணை தொழில்நுட்ப பட்டப் படிப்பு படிக்கலாம் என அதன் இயக்குனர் சாந்தி தெரிவித்தார்.

### உழவர்களுக்கான பட்டப்படிப்பு

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் திறந்தவெளி மற்றும் தொலை தூரக்கல்வி இயக்ககத்தின் இயக்குனர் சாந்தி, திண்டிவனம் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:-

உழவர்கள் தாம் ஈடுபடும் விவசாய தொழிலில், தான் ஒரு பட்டதாரியாக விளங்கிடவும், அனைத்து வேளாண் தொழில்நுட்பங்களையும் தெரிந்து கொண்டு சிறந்த தன்னம்பிக்கையை பெறும் வண்ணமும், தாமும் ஒரு பட்டதாரி என்ற சமூக அங்கீகாரத்தை விவசாயிகள் பெற்றிடும் வண்ணமும் திறந்தவெளி மற்றும் தொலை தூரக்கல்வி இயக்கத்தின் வழியாக 'இளநிலை பண்ணைத் தொழில்நுட்ப பட்டப் படிப்பு' கடந்த 2010-ம் ஆண்டு தொடங்கப்பட்டு, நடத்தப்பட்டு வருகிறது. இது உலக அளவிலேயே முதல்முறையாக விவசாயிகளுக்கென்றே வழங்கப்படும் ஒரு முன்னோடி பாடத்திட்டம் என்பதில் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் பெருமைப்படுகிறது.

### கட்டணம் குறைப்பு

இந்த பட்டப்படிப்பை படித்தால் ஒருவிவசாயி சுயதொழில் முனைவோர் ஆகலாம், வேளாண்மை மற்றும் அதனை சார்ந்த தொழில்களை அறிவியல் அடிப்படையில் செய்வதற்கு வழிகாட்டுதலாக அமையும், நிலத்தினை பண்படுத்துதல் முதல் அறுவடை வரையும், தானியங்களை சேமித்தல்; பதப்படுத்துதல் மற்றும் மதிப்பூட்டுதல் வரை அனைத்து தொழில் நுட்பங்களையும் அறிந்துகொள்ளலாம். அனைத்து பாடங்களும் அனுபவம் வாய்ந்த பேராசிரியர்களால் தமிழில் எளிதாக புரிந்துகொள்ளும் படி, பருவ முறையில் 3 ஆண்டுகளுக்கு 6 பருவங்களில் பாடங்கள் நடத்தப்படுகிறது. மாதத்தில் 2 நாட்கள் (ஏதேனும் சனி, ஞாயிறு) மட்டும் வகுப்புகள் நடத்தப்படும். 10-ம் வகுப்பு படித்துள்ள 27 வயது முதல் 80 வயது வரையிலான அனைவரும் இந்த பட்டப் படிப்பை பயிலலாம். இதற்கான பயிற்சி கட்டணம் ரூ.7 ஆயிரத்து 500-ல் இருந்து, விவசாயிகளின் நலன் கருதி ரூ.4 ஆயிரமாக குறைக்கப்பட்டுள்ளது. இந்த பட்டப் படிப்பு பயில விரும்புபவர்கள் இயக்குனர், திறந்தவெளி மற்றும் தொலை தூரக்கல்வி இயக்ககம், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகம் கோயம்புத்தூர் என்ற முகவரியிலும், 04226611229 என்ற தொலைபேசி எண்ணிலும் தொடர்பு கொள்ளலாம்.

இவ்வாறு அவர் கூறினார்.

பேட்டியின் போது வேளாண்மை அறிவியல் நிலைய தலைவர் சாத்தையா மற்றும் பேராசிரியர்கள் உடனிருந்தனர்.